பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**09 01 2026 FRIDAY 12.40 PM**

ஆகாஷவாணி

# தலைப்புச் செய்திகள்

1. உலகம் முழுவதும் வாழும் இந்தியர்களின் நலனில் மத்திய அரசு அக்கறை கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ரயில்வேயில் வேலை வாய்ப்பு வழங்குவது தொடர்பான முறைகேடு வழக்கில் ராஷ்ட்ரிய ஜனதாதள் கட்சித் தலைவர் திரு லாலு பிரசாத் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. கேரள மாநிலம் ஆலப்புழா மாவட்டத்தின் நான்கு ஊராட்சிப்பகுதிகளில் பறவைக்காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

4. கிரின்லாந்து விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகள் அமைப்பு தலையிடாவிட்டால் அமெரிக்கா நடவடிக்கை எடுக்கும் என்று அந்நாட்டு துணை அதிபர் எச்சரித்துள்ளார்.

5. மலேசிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் –

<<<<<<>>>>>>

**வெளிநாடுவாழ் இந்தியர்கள் தினத்தையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

**இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், உலகம் முழுவதும் வாழும் இந்தியர்களின் நலனில் அரசு அக்கறை கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.**

**நாட்டின் பாரம்பரியத்தை பாதுகாக்கவும், வலுப்படுத்தவும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் முன்வர வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.**

**பாரம்பரிய கலாச்சாரம் மிக்க இந்தியர்கள் குறித்து அரசு பெருமைப்படுவதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.**

**<<<<<<>>>>>>>**

போதைப்பொருள் ஒழிப்புக்கான ஒருங்கிணைப்பு மையத்தின் உயர்மட்டக் கூட்டம், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் புதுதில்லியில் இன்று மாலை நடைபெறவுள்ளது.

போதைப்பொருள் ஒழிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் மாநில அரசுகளின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர்.

போதைப்பொருள் புழக்கம் மற்றும் விற்பனையை முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

<<<<<<<>>>>>>

பிரான்ஸ் நாட்டிற்கான வெளிநாட்டு தூதர்கள் மற்றும் துணைத் தூதர்களுடன் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பாரிஸில் ஆலோசனை நடத்தினார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தற்போது உலக அளவில் எழுந்துள்ள சவாலான சூழ்நிலைகளுக்கு இடையே அதிகாரிகளின் செயல்பாடு குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

வர்த்தகம், நிதி, தொழில்நுட்பம், எரிசக்தி, ஆதாரங்கள் மற்றும் நாடுகளுக்கு இடையே உள்ள பரஸ்பர உறவுகளை பாதுகாப்பது தொடர்பாக இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

இந்தியா — பிரான்ஸ் இடையேயான நல்லுறவு மேலும் வலுப்பெறும் என்றும், அதிபர் திரு மெக்ரானின் ஆதரவு

இந்தியாவிற்கு எப்போதும் உண்டு என்றும் டாக்டர் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, பெருமளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளதாக, ஐ.நா. ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2026-ம் ஆண்டுக்கான உலக பொருளாதார சூழல் மற்றும் வாய்ப்புகள் குறித்து, ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்களின் வாங்கும் தன்மை மற்றும் முதலீடுகள் அதிகரித்திருப்பது, அமெரிக்காவின் கூடுதல் வரிவிதிப்பால் ஏற்படும் பாதிப்பை சரி செய்வதாக உள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட வரிச் சீர்திருத்தங்கள் மற்றும் நிதிச் சலுகைகள் காரணமாக, நடப்பு ஆண்டில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் 6 புள்ளி 6 சதவீதமாகவும், 2027-ம் ஆண்டில் ஒரு சதவீதம் அதிகரித்து 6 புள்ளி 7 சதவீதமாகவும் இருக்கக் கூடும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

கேரள மாநிலம் ஆலப்புழா மாவட்டத்தின் நான்கு ஊராட்சிப்பகுதிகளில் பறவைக்காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதனை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோழி இறைச்சி, முட்டை மற்றும் அதன் தொடர்பானவற்றை பயன்படுத்துவதற்கு ஒருவாரம் தடை விதிக்கப்பட்டுள்ளதாக ஆலப்புழா மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ள 13 ஆயிரத்து 785 கோழிகளை அழிக்க அரசு திட்டமிட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

**ராஷ்ட்ரிய ஜனதாதள் கட்சித் தலைவர் திரு லாலு பிரசாத் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது தில்லி உயர்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

**ரயில்வே நிலங்களை முறைகேடு செய்ததாக சிபிஐ தொடர்ந்த வழக்கில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**திரு லாலு பிரசாத், அவரது மனைவி திருமதி ராப்ரி தேவி, மகன்கள் திரு தேஜஸ்வி, திரு தேஜ் பிரதாப், மகள்கள் மிசா பார்தி, ஹேமா யாதவ் மற்றும், சில அதிகாரிகள் மீதும் முறைகேடு தொடர்பான குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.**

**ரயில்வேயில் வேலை வாங்கித் தருவதாக கூறி, மக்களின் நிலங்களை திரு லாலு குடும்பத்தினர் முறைகேடாக வாங்கியதாக சிபிஐ கூறியுள்ளது.**

**சந்தை விலைக்கும் குறைவாக நிலம் வாங்கப்பட்டதாகவும், பெரும்பாலானவற்றில் ரொக்கமாக பணம் கொடுக்கப்பட்டதாகவும் அந்த குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.**

**<<<<<<>>>>>>**

சோம்நாத் ஆலயம் தெய்வீக ஆற்றல் மூலம் பல நூற்றாண்டுகளாக பல தலைமுறைகளை ஈர்த்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சோம்நாத் ஆலயத்தில் இருந்து வெளிப்படும் ஆற்றல், நம்பிக்கை, துணிச்சல் மற்றும் சுயமரியாதை பாதையில் ஒளி விளக்காக திகழ்ந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

பல யுகங்களாக இந்திய மக்களுக்கு கலங்கரை விளக்கமாக இந்த ஆலயம் திகழ்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டு மக்களின் உணர்வுகளை விழித்தெழச் செய்வதில் இந்த ஆலயத்தின் பங்களிப்பு காலம் காலமாக தொடர்ந்து வருகிறது என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

**பிரான்ஸ் அதிபர் திரு இமானுவெல் மெக்ரான் அடுத்த மாதம் இந்தியா வரவுள்ளார்.**

**புதுதில்லியில் நடைபெறவுள்ள செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான உச்சிமாநாட்டில் அவர் கலந்துகொள்ள உள்ளதாக அதிபர் திரு மெக்ரான் தெரிவித்துள்ளார்.**

**பிரான்சில் நடைபெற்ற தூதரக அதிகாரிகளின் கூட்டத்தில் இதனை தெரிவித்த அவர், இந்தியா – பிரான்ஸ் இடையே உள்ள நட்புறவு வலிமையானது என்று கூறினார்.**

**புதுதில்லியில் அடுத்த மாதம் நடைபெறும் உச்சிமாநாட்டில் வளரும் நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.**

<<<<<<>>>>>>

வெனிசுலா மீது அமெரிக்கா நடத்தியிருக்கும் ராணுவ ஊடுருவல் போருக்கு நிகரானதாகும் என்று அந்நாட்டின் தற்காலிக அதிபர் Delcy Rodriguez கூறியுள்ளார்.

அமெரிக்கா நடத்திய ஊடுருவல் தாக்குதலின்போது உயிரிழந்தவர்களின் நினைவாக அவர்களை கௌரவிக்கும் வகையில் நினைவிடம் அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தற்காப்புக்காக மட்டுமே வெனிசுலா ஆயுதங்களை பயன்படுத்துவதாகவும், நாடுகள் இடையே பரஸ்பர நட்புறவு பாராட்டுவதை அமெரிக்கா கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, வெனிசுலா நாட்டை சேர்ந்த நோபல் பரிசு பெற்ற Maria Corina Machado தற்காலிக அதிபரின் அணுகுமுறை பாராட்டுதலுக்குரியது என்று கூறியுள்ளார்.

தாக்குதலின்போது பிடிபட்டவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பது கௌரவம் மிக்க செயல் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>

கிரின்லாந்து தொடர்பான விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் போதிய கவனம் செலுத்தவில்லை என்று அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

**அந்த பகுதியில் பாதுகாப்பை வலுப்படுத்தாவிட்டால், அமெரிக்க அரசு தலையிட நேரிடும் என்று அமெரிக்க துணை அதிபர் திரு J D Vance தெரிவித்துள்ளார்.**

**இதுதொடர்பாக அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு மார்கோ ரூபியோ , டென்மார்க் மற்றும் கிரின்லாந்து நாடுகளின் தலைவர்களுடன் அடுத்த வாரம் ஆலோசனை மேற்கொள்ள இருப்பதாக கூறினார்.**

**ஆர்டிக் பகுதியை பாதுகாப்பது மிகவும் அவசியமானதாகும் என்றும், அதனை உறுதிபடுத்துவது அமெரிக்காவின் நோக்கம் என்றும் திரு J D Vance தெரிவித்தார்.**

**<<<<<<<>>>>>>**

**வங்கக்கடலின் தென்மேற்கு பகுதியில் உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், இன்று காலை நிலவரப்படி அதே இடத்தில் நிலை கொண்டுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.**

**எமது செய்தியாளரிடம் பேசிய அவர், இது யாழ்பாணம் – திரிகோண மலை இடையே நாளை கரையை கடக்கக்கூடும் என்றும் தெரிவித்தார்.**

***(Sound Byte – செந்தாமரை கண்ணன் 27 Sec. )***

<<<<<<>>>>>>

**சிரியாவில் உள்ள ரசாயன ஆயுதங்களை குறைப்பது தொடர்பான சர்வதேச முயற்சிகளுக்கு அந்நாட்டு அரசு ஒத்துழைக்கும் என்று சிரியா அதிபர் திரு அகமத் அல் ஷரா தெரிவித்துள்ளார்.**

**ஐ நா பாதுகாப்புக்குழுவில் பேசிய அந்நாட்டின் பிரதிநிதி Adedeji Ebo இதனை கூறியுள்ளார்.**

**ஆபத்தான ரசாயன ஆயுதங்களுக்கு தடை விதிக்கும் அமைப்புடன் சிரியா அரசு ஒத்துழைத்து வருவதாக அவர் கூறியுள்ளார்.**

**சிரியாவில் நுற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் ரசாயன ஆயுத தயாரிப்பு தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

**19 இடங்களை மட்டும் அதிகாரிகள் பார்வையிட்டதாக அவர் கூறினார்.**

<<<<<<>>>>>>

## விளையாட்டுச் செய்திகள்

மலேசிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவரை எதிர்த்து விளையாடிய ஜப்பானின் **Akane Yamaguchi** காயம் காரணமாக வெளியேறியதை அடுத்து பி வி சிந்து அரையிறுதிக்கு முன்னேறினார்.

-------------------

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

மும்பையில் நடைபெறவுள்ள முதல் ஆட்டத்தில் பெங்களுரு — மும்பை அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு ஏழரை மணிக்கு தொடங்குகிறது.

அடுத்த மாதம் 5 ஆம் தேதி இறுதிப்போட்டி நடைபெறவுள்ளது

**<<<<<<END>>>>>>**